| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **153/2022** |
| **DATE** | : | **14.08.2026** |
| **பெயர்** | : | **ஞானசம்மந்தம்** |
| **தந்தை பெயர்** | : | **கன்னியப்பன்** |

<u>பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

7. பிரதிவாதி கீதா கிரையம் வாங்கியுள்ள சொத்து என்னுடைய இடத்திற்கு கிழக்கு வடக்கில் அமைந்துள்ளது. தாங்கல் கால்வாய் என்னுடைய சொத்திற்கு வடவண்டை பக்கமும், கீதா சொத்திற்கு மேலண்டை பக்கமும் உள்ளது. பொண்ணுரங்கம் சொத்து வழியாக தான் கால்வாய் செல்கிறது என்று சொன்னால் சரியல்ல, கீழண்டை பக்கம் இருக்கும் கீதா நிலம் வரை செல்கிறது. தாங்கலில் இருந்து வரும் ஆற்றுக் கால்வாயும் சர்வே எண் 602/2, 602/1, 601/1பி வரை வந்து கீதா நிலத்தில் பாய்ச்சல் முடிகிறது. கீதா நிலம் தாண்டி செல்வதில்லை, அதனுடன் முடிகிறது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஸ்கெட்ச் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஸ்கெச்சில் 601/1பி இல்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சியிடம் வா.சா.ஆ.12 ஆவணம் காண்பிக்கப்பட்டது. அதில் சர்வே எண் 601/1 பி எங்கு உள்ளது என்றால் 601 என்று மொத்தமாக காட்டப்பட்டுள்ளது.

8. சர்வே எண் 602ன் விஸ்தீரனம் 1 ஏக்கர் 69 செண்ட், அதில் ஒரே ஒரு போர் உள்ளது. எனது சொத்தான சர்வே எண் 601/2ன் விஸ்தீரனம் 98 செண்ட், அதில் 1 போர் உள்ளது. எனது சர்வே எண்ணிலும், எனது மனைவியின் சர்வே எண்ணிலும் போர் உள்ளது, தாங்கலில் இருந்து வரும் தண்ணீரில் எந்த தடையும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தாங்கில் இருந்து வரும் தண்ணீர் சர்வே எண் 601, 602, 601A, 601Bல் பாய்கிறது. எனது சாட்சியத்தில் 601Bக்கு தாங்கில் இருந்து தண்ணீர் பாய்வதற்கு வழி இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN

Principal District Munsif,
Kancheepuram.